பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
28 JAN 2001

# வலம்புரி
# VALAMPURI

ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1931)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 16 திங்கட்கிழமை (29-01-2001) தொலைபேசி: 3378 ஒலி: 41

## குஜராத்தில் மீண்டும் நில நடுக்கம் ஆய்வாளர்கள் அபாய அறிவிப்பு:

(சென்னை)

இந்தியாவின் மேற்குமாநிலமான குஜராத்தை தாக்கிய பெரும் பூமியதிர்வின் அனர்த்தங்கள் அழிவுகள் மறையும் முன்னரே, மற்றொரு பூமியதிர்வுக்கான அறிகுறிகள் காணப்படுவதுடன், அது இந்தியாவை மேலும்மோசமாகத் தாக்கலாமென புவியியல் ஆய்வாளர் அபாய முன்னறிவிப்பை விடுத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்தஇயற்கையின்கோரத் தாண்டவத்தால், குஜராத்தின் முக்கியநகரமான அஹமதாபாத், மற்றும் புஜ்நகரங்கள் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மக்களின் மரணங்கள் குறித்து சரியான எண்ணிக்கையை வெளியிடமுடியாமல் இந்திய அரசு திணறிக்கொண்டிருக்கின்றது.

இறந்தவர்கள் மற்றும்காயமடைந்தவர்கள் காணாமல் போனவர்கள் என கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகமாக உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள்தெரிவிக்கின்றன.

மீட்புப்பணிகள் பெரும் எடுப்பில் நவீன கருவிகளுடன் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இற்றைவரை முழுமையாக அப்பணியை

→ 8ஆம் பக்கம் பார்க்க

## மீன் சாப்பிட்ட மூவர் பரிதாப மரணம் முழங்காவிலில் சோகம்

இரணைமாதா முழங்காவில் பகுதியில் மதிய உணவின் போது முள்பேத்தை என்ற வகை மீனை உட்கொண்ட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நேசன் உத்தமதேவி (வயது-19) சகாயன் றெசீனா (வயது-9) ஆறுபிள்ளைகளின் தயாரான சன்நீக்கிலஸ் செல்வராணி (வயது-34) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

(ந-5)

## ★ தமிழீழ விடுதலைப் புலிகள்
# "ஈழம்" கோரிக்கையை கைவிட்டால்
# யுத்த நிறுத்தம் செய்து பேசத் தயார்!

## ஜன மண்டலியில் ஜனாதிபதி உரை



(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்துபேசுவதற்கு முன்வருவார்களேயானால் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது.

பேச்சுவார்த்தை குறித்தவொரு கால எல்லைக்குள் நடைபெறவேண்டும். பேச்சுவார்த்தை நம்பிக்கைதரக் கூடியதாகவும் இருக்க வேண்டும் கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது ஐக்கிய தேசியக்கட்சி 3 தடவையும், நாம் ஒரு தடவையும் ஏமாந்தோம். தொடர்ந்தும் நாம ஏமாறத்

## "எரிக்சோல்" விரைவில் கொழும்பு வருவார்

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினைவிவகாரத்தில் சமாதானமுயற்சியில்ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அடுத்த சில தினங்களில் கொழும்பு வரவுள்ளதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் சமாதான பேச்சுவார்த்தை தொடர்பான முடிவுகளுடன் வரவுள்ள தூதுவரை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்து பேசவுள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(ம)

## இனப்பிரச்சினைத்தீர்வு அரசுக்கு சவால்



பேச்சுவார்த்தை குறித்தவொரு கால எல்லைக்குள் நடைபெறவேண்டும். பேச்சு வார்த்தை நம்பிக்கைதரக் கூடியதாகவும் இருக்க வேண்டும் கடந்த காலங்களில் விடு தலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது ஐக்கிய தேசியக்கட்சி 3 தடவையும், நாம் ஒரு தடவையும் ஏமாந்தோம். தொடர்ந்தும் நாம ஏமாறத் தயாரில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநயக்க குமாரதுங்க நேற்றிரவு 9.30 மணிக்கு ரூபவாஹினியில் ஜன மண்டல நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையற்றும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த உரையில் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்திருப்பதாவது;

**பேச்சு என்றால் பேச்சு யுத்தம் என்றால் யுத்தம்**

அரசாங்கம்தெரிவித்துள்ள மேற்படி கோரிக்கைக்கு அமைவாக விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்கு முன் வந்தால் பேச்சு வார்த்தை நடத்தப்படும் இப் பேச்சு வார்த்தையின் போது நம்பிக்கை தொனி தென்பட்டால் அரசு யுத்த நிறுத்தம் ஒன்றைமேற்கொள்ளும் அல்லாது போனால் யுத்தத்தை தொடர்ந்தும்நடத்த நாம் தயாராகவுள்ளோம்;

விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைக்குத் தயார் ஆதனால் நாம் பேச்சு நடத்துவோம் அதை விடுத்து அவர்கள் யுத்தம் நடத்தினால் எம்மாலும் நடத்த முடியும் எமது இந்த நிலைப்பாடு குறித்து நோர்வேக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது;

→ (8ஆம் பக்கம் பார்க்க)

சில தினங்களில் கொழும்பு வரவுள்ளதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ம)

# இனப்பிரச்சினைத்தீர்வு அரசுக்கு சவால்

## பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கருத்து

(கொழும்பு)

நீண்ட காலமாக தீர்வு காணப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது அரசுக்கு ஒரு சவாலாக இருப்பதாக அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது;

நீண்ட காலமாகத் தீர்த்து வைக்கப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசாங்கம்வைத்திருக்கும்தீர்வுஎன்ன? என்று புத்திஜீவிகள் பலரும் வினாவுகின்றனர். இதற்கு விடை கூறுவது சிக்கலான காரியமாக உள்ளது என்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு

(8ஆம் பக்கம் பார்க்க)

# சிற்றி ஒவ் றிங்கோ நாளை புறப்படும்

(திருமலை)

திருமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் பயண சேவையில் ஈடுபட்டுள்ள ''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் இன்று திருமலையில் இருந்து புறப்படவுள்ளதாகத் திருமலை பிரதேச செயலர்எஸ்.வேலும் மயிலும்

→ 8ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் பயணச் சீட்டு இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நாளை காங்கேசன்துறையிலிருந்து புறப்படும்சிற்றிஒவ் றிங்கோ பயணிகள்கப்பலுக்கான பயணச்சீட்டு இன்று வழங்கப்படுமென ரான் அமைப்புஅறிவித்துள்ளது.

இக்கப்பலில் முதலாவது பயணசேவைக்கு பயணஅனுமதி பெற்றவர்களுக்கே பயணச்சீட்டு வழங்கப்படவுள்ளது. (ந)

# ஆனையிறவுபடைதளத்தைமீண்டும் இராணுவம் கைப்பற்றியே தீரும் !

## யாழ். மாவட்ட தளபதி அன்ரன் விஜேந்திரா உறுதி!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் யாழ்ப்பாணத்தை இராணுவத்தின் பிடியில் இருந்து ஒரு போதும் மீட்க முடியாதுஎன்றுயாழ்மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேயேந்திரா பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு பேட்டி அளித்துள்ளார். அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இராணுவத்தினர் தற்போது மிகவும் பலமான நிலையில்உள்ளனர் கண்டி வீதி ஏ.9 பாதையில் பெரும் பகுதியை இராணுவம் தற் போது கைப்பற்றியுள்ளது;

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ரிவிகிர, ரிவிகிரண, ஆகிய இரண்டு படை நடவடிக்கைகளின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஆயிரத்து 112 பேர் மரணமாகியுள்ளதாகவும்; ஆயிரத்து 192பேர் காயமடைந்திருப்பதாகவும் மேஜர்ஜெனரல் அன்ரன்விஜேந்திரா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மேற்கொண்ட நான்கு தாக்குதல் நடவடிக்கைகளில் ஒரு தாக்குதலே அவர்களிற்கு வெற்றி அளித்துள்ளது., ஏனைய மூன்று நடவடிக்கை

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சின்னராசா வசந்தா என்பவரின் தங்கத்தாலிக்கொடி 26-01-2001 உரும்பிராய்க்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் J/185 உடுவில் மத்திய பிரிவில்உள்ள இலந்தையடி நலன்புரி நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்

(2466)

## பாட நூல்கள் வழங்கப்படவில்லை

(செம்பியன்பற்று)

வடமராட்சி கல்வி வலயத்தில் பெரும்பாலான பாடசாலைகளில் மூன்றாம்தரத்திற்கான தமிழ், சமயம் ஆகிய பாட நூல்கள் வழங்கப்படவில்லை.

மாணவர்களிற்குரிய பாட நூல்கள் இல்லாமல் ஆசிரியர்கள் கற்பிப்பதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

யாழ்ப்பாண வலயத்தில் பொதுவாக எல்லாப் பாடசாலைகளிற்கும் மூன்றாம் தர தமிழ் பாட நூல் வழங்கப்பட்டபோதிலும வடமராட்சி வலயத்தில் ஆசிரியர்களுக்காவது ஒரு பாட நூலாவது கிடைக்குமா என சம்மந்தப்பட்ட ஆசிரியர்களும் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

[உ-42]

### பங்குனி வரை நிர்வாகசபை இயங்கும்

(மத்திகை)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் நிர்வாக சபை தொடர்ந்து பங்குனி 21 ஆம் திகதிவரை செயற்பட பொதுச்சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

யுத்தகால அனர்த்தங்களின் பிரகாரமும் யாப்பு அமைப்பின்படியும் இச்சபை மேலும் மூன்று மாதங்களுக்கு செயற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

சபையின் தலைவர் நா. இராசநாயகம், செயலாளர் ல. இராசதுரை, பொருளாளர் பெ. கனகரத்தினம் ஆகியோரும் வெற்றிடமாக இருந்த உபதலைவர் பதவிக்கு சி. சதீப்பிரகாஸ் என்பவரும். நிரப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-23)

### பஸ்தரிப்பிடம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல பகுதிகளிலும் பயணிகளின் நன்மை கருதி பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

(செ-104)

### பழைய மாணவர் சங்கம் செயற்பாடில்லை

(சங்கானை)

யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கடந்த ஐந்து ஆண்டு காலமாகசெயற்பாடுகள்எதுவுமின்றியிருப்பதால் மேற்படி பாடசாலை போதிய வசதிகளின்றி அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளது என பெற்றோர்களால் பெரிதும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கவேண்டியபழைய மாணவர் சங்கம் இவ்வாறு அக்கறையில்லாது செயற்படாது இருப்பது குறித்து கல்வியாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

(செ-ப-18)

## யாழ் கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவு கண்காட்சி அடுத்த மாதம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் கடந்த 2000 ஆம் ஆண்டின் கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட அனைத்து பயிற்சி நெறிகளுக்குமான கண்காட்சி எதிர்வரும் மாசிமாதம் 7 ஆம் திகதிமு. ப10.00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முறைசாரா கல்விப் பிரிவின் உதவி கல்விப்பணிப்பாளர் திருமதி சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ். வலய கல்விப்பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

இக்கண்காட்சியில் கடந்த ஆண்டு நடத்திமுடிக்கப்பட்ட தொழிற்திறன் பயிற்சி திட்டத்தின் கீழான பயிற்சி நெறிகளான தையல், வீட்டு மின்னிணைப்பு, வானொலிச் சீர்க்காப்பு, நூலகர் சேவை, கணனி, உடயமைத்தல், அலங்கர பொருள் உற்பத்தி மற்றும் ஜனதா கல்வித் திட்டத்தின் கீழான பின்னூட்டல் பயிற்சிகள் சம்பந்தமான அறிவுபூர்வ விடயங்கள் இணைக்கப்படவுள்ள அதே வேளை, கட்புல சாதன சம்பந்தமான அறிவியல்பொருட்களும் இதில் இடம்பெறவுள்ளன.

(உ-14)

### தொண்டர் ஆசிரியர் விவகாரம்

## ஈ.பி.டி.பி. அமைப்பு கல்வி அமைச்சருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாக கடமை புரிகின்றவர்களுக்கான நியமனம் வழங்கப்படுவது தொடர்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இப் பேச்சுக்களின் போது வடக்கு-கிழக்கில் நிலவுகின்ற போர்ச் சூழல் மற்றும்போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தொண்டராசிரியர்கள் ஆற்றி வரும் பங்கு குறித்தும்,

தொண்டர் ஆசிரிய நியமனம் தொடர்பான விடயத்தை சுயலாப நோக்கிலும் மலிவான அரசியல் விளம்பரம் தேடும் வகையிலும் பயன்படுத்த சிலர் முனைவது குறித்தும்,

தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பான விடயத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்பணிகள்குறித்தும் இச் சந்தர்ப்பத்தின் போது எடுத்துக் கூறப்பட்டது.

(உ)

## கிராமப் புற பாடசாலைகளில் வளங்கள் பல இருந்தும் மாணவர் வளம் குறைவு

### கோட்டக்கல்வி பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(கோப்பாய்)

கல்வி வளம் நிறைந்த பூமியாகக் காணப்படும் நீர்வேலியில் குறிப்பிட்ட சதுர கிலோமீற்றருக்குட்பட்ட பகுதியில் ஐந்து பாடசாலைகள் காணபபடுகின்றன.

ஆயினும் இவற்றைக் கருதாது கூடுதலாக பிள்ளைகளின் பெற்றோர்கள் தற்போது நகரப் பாடசாலைகளை நாடிச் செல்வது கவலைக்குரியது. தேவையான கட்டட வளம், பௌதிகவளம் ஆசிரிய வளம் ஆகியன இருந்த போதும் மாணவர் வளம் மட்டும் குறைந்து செல் வதை எமது புள்ளி விபரத்தரவுகள் சுட்டி நிற்கின்றன.

நீர்வேலி சீ.சீ ரி எம்.பாடசாலையின் செயற்பாட்டறையைத் திறந்து வைத்துப் பேசிய கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் இ இராசசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் ஒரு பாடசாலையை மூடுவது ஒரு சிறைச்சாலையைத் திறப்பதற்கு ஒப்பாம். அதைவிட இன்றைய நிலையில் மூடிக் கிடக்கும் ஒரு பாடசாலையைத் திறப்பது இலகுவான காரியமல்ல என்பதை ஒருவரும் மறந்து விடக் கூடாது எனவே கிராமத்தின் வளர்ச்சியையும் பாடசாலை வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு சகல வளங்களையும் கொண்ட இப்பாடசாலையை மேலும் மெருகூட்டுவது சமூகத்தின் முக்கிய கடப்பாடாகும் என்றார்.

(உ-79)

## நீதித்துறைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் ஜனநாயகத்திற்கு சவால்

### சபையில் ஐ.தே.க.எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நீதித்துறையின் சுதந்திரத்திற்கு பெரும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையானது ஜன நாயகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில்நீதித்துறையின் தற்போதைய நிலைமை பற்றிய விசேட விவாதம்பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்றபோது, விவாதம் மீதான பிரேரணையை முன்மொழிந்து பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரேரணையை வழிமொழிந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் திலக் குமாரதுங்க,

பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டங்கள் கூட சரிவர நடைமுறைப்படுத்துவதில்லை எனவும் பொலிஸ் திணைக்களம் அரசியல் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டிருப்பதனால் அதன் கடமைகளைச் சரிவரச் செய்ய முடிவதில்லை எனவும் குற்றம் சாட்டி பேசினார்.

(உ-4)

## இடமாற்றம் பெறுவோர் விபரம் வெளியாகியது

(நேற்றைய தொடர்ச்சி)

சங்கானைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி சிவதட்சணாமூர்த்தி. திருமதி எஸ் சுகுமார் ஆகியோர் உடுவில் பிரதேச செயலகத்திற்கும் கே.சிவலிங்கம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் யாழ். பிரதிமாகாண சுகாதாரப்பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த திருமதி கே. விசாகப்பெருமான் நல்லூர் பிரதேச செயலகத்திற்கும் திருமதி வி சண்முகவடிவேல் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கும், செல்வி ஆர். யோகராஜா நல்லூர் பிரதேச செயலகத்திற்கும். பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த பி.இராஜமணி கரவெட்டி பிரதேச செயலகத்திற்கும், செல்வி எஸ்.சிவபாதசுந்தரம் சங்கானை பிரதேச செயலகத்திற்கும், யாழ். பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஆர் இராஜேந்திரன், வி சுந்தரலிங்கம் ஆகியோர் நல்லூர் பிரதேச செயலத்திற்கும் பி.ஆனந்தகுமார். கே கருணாகரன், திருமதிஎஸ். புஸ்பராஜா யாழ்ப்பாணப் பிரதேசச் செயலகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(உ)

### ஸ்ரீசுந்தர-

நாள் ஆஞ்சநேயரின் உந்துதலினால் கோயிலை எப்பாடுபட்டாவது மருதனார் மடத்தில் உள்ள ஓர் வயற்காணியில் அமைப்பது என்ற தீர்மானத்தை எடுத்தார்.

திருக்கோயில் அமைக்கும் தெய்வீகப் பணி மங்களகரமான பிரமாதி வருடம் சித்திரைத் திங்கள் 9 ஆம் நாள் வியாழக்கிழமை புனர் பூச நட்சத்திரமும் அமர்த சித்த யொகமும் கூடிய காலை 7.30 மணிக்குசிவத்தமிழ் செல்வி துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மேற்படி விழாவில் பெருந்திரளாள மக்கள், தலைசிறந்த சிவாச்சரியப் பெருமக்கள், வர்த்தக அன்பர்கள் கலந்து சிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆஞ்சநேயர் பெருமானின் பெருங்கருணையினாலும், பொது மக்கள் தந்த பெரிய ஆதரவினாலும் திருப்பணித் தொண்டு மிகச் சிறப்பாக நடை பெற்றுள்ளது.

சிறப்புக்கள வாய்ந்த ஆஞ்சநேயரை வழிபாடுசெய்வதற்கு யாழ். மாவட்டத்தில் ஒரு சிறநத கோயில் இல்லாமல் இருந்தது. அந்தக் குறையைச் சிவ ஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் மக்களின் துணை கொண்டு நீக்கியுள்ளார்.

### கோயில்அமைந்த சூழல்

மிகச்சிறந்த அழகான கோயிலை மிகச்சிறந்த இடத்தில், அதாவது ஆஞ்சநேயருக்குமிகபபிடித்தமான காய்கறிகள் பயிர்செய்கை செய்யும் தோட்டங்களுக்கு மத்தியில் அமைந்து இருபபது சாலச் சிறந்ததே கோயில் மலையைக் குடைந்து கட்டிய மாதிரியாக அமைக்கப்பட்டு அத்துடன் கலியாண மண்டபத்தையும் சேர்த்து அமைந்து இருப்பது கோயிலுக்கு மேலும் மெருகூட்டுகின்றது. கர்ப்பக் கிரகத்திற்கு உள்ள செப்புத்தகடுகள் பதிக்கப்பட்டுள்ளது இது அனுமாரின் சாத்தியத்தை அதிகரிக்கச் செய்யும் அத்துடன் திருக் கோயிலுக்கு மெருகூட்டு கின்றது.

மூலவிக்கிரகம் இந்திய முத்தையா ஸ்தபதியால் வடிவமைக்கப்பட்டு இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளது. இதே மாதிரியாக இயந்திரத் தகடுகளும் இந்தியாவில் தயாரிக்கபபட்டு தருவிக்கப்பட்டுள்ளது. ஈழவள நாட்டில் தலைசிறந்த சிவாச்சாரியப் பெரியோர்கள் கும்பாபிஷேக கிரியைகள் நடாத்தி வைக்கின்றார்கள் அதுமட்டுமல்லாமல் ஒன்பது அடி உயரமான சிலையைப் பிரதிஷ்டை செய்யும்பொழுது பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். எண்ணைக்காப்பு சாத்துவதற்கு எத்தனையொ ஆயிரக்கனக்கானோர் முண்டியத்துக்கொண்டு நீண்ட வரிசையில் வெய்யிலில் காத்து நின்றார்கள்.

### கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகத்தின் பொழுது பல்லாயித்க்கணக்கான பத்தர்கள் கலந்து கொள்வார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆஞ்சநேயரின்பூரண அனுக்கிரகம்பெற்ற குருக்கள் அய்யா அவர்களின் பெரு முயற்சியினால் மிகக் குறுகிய காலத்திற்குள் மேற்படி கோயில்கட்டி கும்பாபிஷேகம்செய்ய முடிந்தது. எனவே நாமும் அவர்வழி சென்று ஆஞ்சநேயரின் பூரண கிருபா கடாக்ஷ்ந்சதைப் பெறுவோமாக.

### எதிர்க்கட்சிகள் தீர்மானம்

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்கள் நான்கினையும் பற்றிய நகல் அறிக்கையினை சகல அமைப்புக்களிடமும் வழங்கி ஆலோசனைகளைப் பெறுவது தொடர்பான தீர்மானம் அண்மையில் ஐ. தே. க. அலுவலகத்தில் இடம்பெற்ற எதிர்க்கட்சி தலைவர்கள் கூட்டத்தின் போது எடுக்கப்பட்டது.

(உ-4)

## காரணமின்றி கைதானவர் விடுதலை

(கொழும்பு)

கழுபோவில எனும் இடத்தில் காவல் தொழிலாளியாக கடமையாற்றும் தங்கவேலு சிவசம்பு (வயது 67) என்பவரை கடந்த 6 ஆம் திகதி காரணம் எதுவுமின்றி பொலிஸார் கைது செய்து கடுமையாக தாக்கியதாகவும்,

மனித உரிமைக் குழுவின் தலையீட்டினால் பின்னர் இவர் 18 ஆம் திகதி விடுவிக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

(உ-9)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அளவெட்டி கணேஸ்வரக்குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் ஜீர்ணோத்தாரணபிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

(செ)

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

மருதனார்மடம் அருள்மிகு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயகோயில நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

தொடர்ந்துநாற்பத்தைந்து நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

[செ]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் புனராவர்த்தன உத்தமயாக நவகுண்டபக்ஷமகாயாக கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாற்பத்தைந்து நாட்கள் மண்டலாபிஷேகம் நடை பெறவுள்ளது.

[செ]

# அஞ்சனாதேவியின் புதல்வனார் ஆஞ்சநேயரை

# நெஞ்சிலிருத்தி நிறையருள் பெறுவோம்



சிரஞ்சீவியான ஆஞ்சநேயர் பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் பெற்றவர். இச்சிரஞ்சீவியான அனுமார் தம்மை வழிபடுவோருக்கும் ஸ்ரீராம பக்தர்களுக்கும் நேரில் சாட்சியளித்து அவர்களின் துன்பங்களைப் போக்கி அருளுவார். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆஞ்சநேயர் அஞ்சனைக்கு மைந்தனாகப் பிறந்ததால் 'ஆஞ்சனேயன்' எனவும் மருதம் (காற்று) பெற்றெடுத்ததால் 'மாருதி' எனவும் வழங்கப்படுகின்றார். வற்றிய கன்னங்களை உடையதால் 'அனுமன்' எனவும் வாசனையை (சிரஞ்சீவி) தாங்கிப் பிறந்ததால் ,சந்கவா ஹாத் மஜ' எனவும் சிறப்பிக்கப்படுகின்றார்.

### அஞ்சனாதேவி

பூமியின் அம்சமான அஞ்சனாதேவிக்கும் வாயுதேவனுக்கும் மகனாகப் பிறந்தவரே. இவ்வாஞ்சனேயர். அஞ்சனாதேவியின் தந்தையான கேசரி சிவபக்தன் அவனுக்கு வெகுகாலமாக மகப்பேறு உண்டாகவில்லை. அதனால் தனக்கு ஓர் குழந்தை வேண்டி சிவனைத் தியானித்துக் கடும் தவம் செய்தான். இவனது தவத்தின் திடத்தை வியந்த சிவன் அவன் முன் தோன்றி,

''பக்தனே இந்தப் பிறவியில்
உனக்கு மகப்பேறு
கிடையாது, இருப்பினும் உன்
தவ வலிமையால்
உனக்கு ஓர் மகள் பிறப்பாள்
அவளுக்கு ஓர்
மகன் பிறப்பான் அவன் தான்
உனக்கு
நற்பெயர் எடுத்துக் கொடுக்
கும் பெயரானவன்''

என்று வரம் கொடுத்தருளினார்.

### வாயுபுத்திரன்

இந்த வரத்தின் பயனாக கேசரிக்குப் பிறந்தவள் தான் அஞ்சனாதேவி.

இவளுக்கும் வாயு தேவனுக்கும் மகனாகப் பிறந்தவர் தான் ஆஞ்சநேயர். அஞ்சனாதேவி புத்திர பாக்கியம் கருதிக்காட்டிலே தவம்இருந்த போதுவாயு தேவனின் திருவருட்சம்பந்தத்தால்பிறந்தவளாகையால், ஆஞ்சநேயர் வாயுபுத்திரன் என வழங்கப்பட்டார்.

ஆஞ்சனேயர் அனுமான் வாயுபுத்திரன், மஹாபலிஷ்டன், இராமேஷ்டன், அர்ஜீனசகன் பிங்காட்சன் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார் அனுமாரின் புகழைப் பற்றி ஸ்ரீமத்மபுராணம், வேங்கடேச புராணம், ஸ்ரீமத்பாகவதம், ஆனந்த ராமாயணம், ஸ்ரீ பக்த விஜயம் போன்ற நூல்கள் மிக அழகாக எடுத்துயம்புகின்றன.

### வழிபாட்டில் வரும் பயன்கள்

இவ்வாஞ்சநேய சுவாமிகளை வழிபட்டால் கிடைக்கும் பலன்களை சொல்லில் விளக்கமுடியுமா? ஆஞ்சநேயர் பெருமானை வழிபட்டால் புத்தி, பலம் உறுதிப்பாடு, அஞ்சா நெஞ்சம், ஆரோக்கியம், விழிப்பு, வர்க்குவன்மை ஆகிய எட்டுச் சித்திகளும் எமக்கு ஒருங்கே கிடைக்கும்.

**ச. நிரஜா**
**இணுவில்**

இவ்வாஞ்சநேயரை எல்லா நாட்களிலும் வழிபட்டாலும் புதன், வியாழன், சனி ஆகிய நாட்களே சிறந்தவை ஆஞ்சநேய சந்நிதிகளில் வெண்ணெய் சாத்தி வழிபடுதல் சிறந்தது, நமது வேண்டுதல்களுக்கு வெண்ணெய் சாத்தினால் ஆஞ்சநேயர் வெண்ணெய்யைப் போல உருகி நற்பலனைத் தந்தருள்வார்.

### சுந்தரன்

ஆஞ்சநேயரின் மூலப்பெயர் தான் சுந்தரன். இதனால் தான் இராமாயணத்தில் அனுமாரின் வரலாறு கூறும் காண்டத்திற்கு 'சுந்தரகாண்டம்' என பெயரிடப்பட்டிருப்பதிலிருந்து அனுமாரின் பெருமையும் அழகு வெளிப்படுகின்றது இவ்வழகிய அனுமார் பிறந்தவுடன் அஞ்சனாதேவியால் 'சுந்தரா' என்று அழைக்கப்பட்ட சிறப்புக்குரியவர்.

### சிலை பிரதிஷ்டை

இத்தகைய ஆஞ்சநேயருக்கு இலங்கையில் மருதனார் மடத்தில் அமைக்கப்பட்டிருக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## போர் ஓயட்டும்

ஆஞ்சநேயத் தெய்வமே உன்னை
செஞ்சுகிறேன் அமைதி வாழ்வு வேண்டி
தஞ்சையும் புஞ்சையும் பரிழில் போனதை
நெஞ்சம் நிலைத்திட அருள் தருவாய்

மருதனா மடத்திலே எழுந் தருளி
பெரும் அமைதி தந்திட வழிசெய்திட
விரும்பியே வந்த தெய்வம் அல்லவா?
அரும்புகளை சாத்து அருள் தருவாய்

சி. குமாரலிங்கம்


ஆஞ்சநேயரின் கும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

★ பெயின்ரிங், மெக்கானிக், ரிங்கரிங் ★

**வேலன்ஸ்**

**வெல்டிங் தொழிலகம்**

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

(கி/1412)



ஆஞ்சநேயா - தமிழர் துயர் துடைக்க
அருள் தாருமையா

திருமண வைபவங்களுக்கேற்ற
★ பட்டுவேட்டிகள் ★ கூரைச்சேலைகள்
● சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
பெண்களுக்கான
★ ஸ்கேட் ★ பிளவ்ஸ் ★ பஞ்சாபி
மற்றும் புடவைத் தேவைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

**கணேசன்ஸ்**

இல. 9, மத்திய சந்தை, சுன்னாகம்.

(கி/1411)



ஐயனே ஆஞ்சயநேயா வருக அருள் தருக

★ பலசரக்கு, ★ பாடசாலை உபகரணங்கள்
விற்பனையாளர்

**கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா**

**களஞ்சியம்**

யாழ் வீதி, சுன்னாகம்.

நியூ ஸ்வாதி ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, கைதடிச் சந்தி, கைதடி.

ராஜிகா ஸ்ரோர்ஸ்
கைதடி மத்தி. கைதடி.

சிவரஞ்சினி தொலைத்தொடர்பு நிலையம்
கைதடி தெற்கு, கைதடி.
T. P:- 212576 (கி/1413)


**மருதனார்மடம்**

# ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்

# கோயில் வரலாறு

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பிரதம குருக்களாக சிவ ஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் தொடர்ந்து இருபத்தைந்து வருடங்களுக்குமேலாக இறைபணி மேற்கொண்டு வருகின்றார். குருக்கள் பூசை வழிபாடு காண்பவர்ளை மெய் உருகி பரவசத்தில் ஆழ்ந்துவிடும் அவர் மிகச் சிறந்த ஒழுக்க சீலராக வாத ஆகம விற்பன்னராக திகழ்ந்து வருகின்றார். என்பதும் குறிப்பிடத்தக்கது பரார்த்த பூசையில் வல்லவராக இருந்தாலும் கூட ஆன்மார்த்த பூசையையும் மிகச் சிறப்பாக செய்து வருகின்ற ஓர் அதி உத்தம மொத்திர அந்தணப் பெருமகனாவார் அவர் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு தியாள வழிபாட்டில் ஈடுபடுகின்ற பெருமகனாவார்.

### கனவில் தோன்றினார்

இறை தியானத்தில் ஈடுபட்டு வருகின்ற பொழுது ஆஞ்சநேயரையும் அவரின் காயத்திரி மந்திரத்தையும் தியானத்தில் கூறி நீண்ட நாட்கள் வழிபாட்டு வந்தார் இற்றைக்கு பத்து ஆண்டுகளுக்கு முன் ஆஞ்சநேயர் குருக்கள் ஐயாவின் கனவில் காட்சி கொடுத்து தனக்கு ஓர் கோயில் கட்டி வழிபாடு செய்யும் வண்ணம் கட்டளை இட்டு மறைந்தருளினார்.

**பிரம்மஸ்ரீ**
**காரை கு. சிவராஜசர்மா**

### வரலாற்று ஆய்வு

இதனைத் தொடர்ந்து ஆஞ்சநேயர் வழிபாட்டில்

மிகுந்த பயபக்தியுடன் ஈடுபட்டுவரலானார் ஆனால் எப்படி கோயில் கட்டுவது இதனைப்பற்றி பூசலார் நாயனார் மாதிரி மனதில் கோயில் கட்டத்துவங்கினார. பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகளில் வரும் ஆஞ்சநேயர் பற்றிய தகவல்கள், கட்டுரை சுஅ போன்றவற்றைச் சேகரிக்கத் தொடங்கினார் இந்தியாவில் ஆஞ்சநேயர் வழிபாடு கோயில்கள, கோயில் வழிபாட்டு முறைகள் போன்றவற்றையும் சேகரிக்கத் தொடங்கினார். அதுமட்டுமில்லாமல் வேதம் ஆகமங்களில் எப்படி ஆஞ்சநேய வழிபாடுகள் கூறப்பட்டுள்ளது எப்படிக் கோயில் கட்ட வேண்டும்என்பதைப் பற்றிய விபரங்களையும் தாமாகவும் அறிவியற் சிறந்த சிவாச்சாரியார்களை கலந்துரையாடுவதன் மூலமும் பெற்றுக் கொண்டார்.

### பல் துறை ஆலோசனை

நூல்களை கற்று சிறந்த பெரியார் சிற்ப சாஸ்திரம், சிற்பரத்தினம் போன்ற கோயில் கட்டட நிபுணர்களையும் கலந்து ஆலோசனை செய்தார். இப்படியாக பல துறை சார் வல்லுனர்களின் ஆலோசனைகளையும் கொண்ட பொழுதும் பொருளிலார்க்கு இவ்வுலகம்இல்லை என்ற மாதிரி நிர்மாணிப்பதற்கு பொருளாதரப்பிரச்சினை ஏற்பட்டது.

### கோயில் அமைத்தல்

இருந்த பொழுதும்இரண்டு மூன்று வருடங்களாகமனதில் கோயில் கட்டி ஆஞ்சநேயரை வழிபட்டு வந்தார். இப்படியாக இருக்கும் போது ஒரு

→ 2ஆம் பக்கம் பார்க்க


அருள் வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்புற்று அருளோங்க வேண்டுகின்றோம்

★ சகலவிதமான மின்சார உபகரணங்கள் ★ சைக்கிள் உதிரிப்பாகங்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ளவும்
★ உள் நாட்டு ★ வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களை வசதியான சூழலில் பெற்றுக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

**சிவதர்சன்**

394, மணிக்கூட்டு வீதி, T. P:- 2417 யாழ்ப்பாணம்.

(கி/1414)

# செய்தித் துளிகள்

## சமுகம்தரவும்

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன அருளானந்தம் செல்வகுமார், மாணிக்கம் டெனிகாந் ஆகியோரின் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் வழக்கு விடயமாக பின்வருவோரை யாழ் மணியம் கட்டடத்தில் இயங்கும் மனிதகௌரவத்திற்கான மன்றக் காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு இணைப்பாளர் ஐ. சிவராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

அருளானந்தம் திலகவதி 34, 3ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.

மாணிக்கம் . நாகேஸ்வரி கும்பளை கிழக்கு அளவெட்டி. (செ)

## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கோப்பாய்)

உலக வங்கி நிதியீட்டத்திட்டத்தின் கீழ் அரசாங்க பாடசாலை ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான குறுகிய கால வெளி நாட்டுப் பயிற்சியளித்தல் திட்டத்தின் கீழ் ஆட்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பம் அண்மையில் கோரப்பட்டிருந்தது.

இதற்கான விண்ணப்பம் இம்மாதம் 12ம் திகதியுடன் முடிவடைந்த போதும், இத்திட்டத்தில் சேர விரும்பும் யாழ் மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களை இம் மாதம் 30ம் திகதிக்குமுன்பாகதமது விண்ணப்பங்களையாழ் கல்வி வலயத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண கல்வி வலயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-79)

## தென்மராட்சி தேங்காய் வருகை

(கோப்பாய்)

கைதடிப் பகுதிக்குச் செல்வோர் தற்போது தேங்காய் மூடைகளுடன் திரும்புவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மின்சார உபகரணப்பொருட்களையும் பெறுமதியான பொருட்களையும் கொண்டு வருபவர்களிடத்து படையினர் கவனம் திரும்பியுள்ளதால் தேங்காய் மூடைகளுடனும் சிலர் செத்தல் மிளகாய் மூடையுடனும் வருகின்றமை காணமுடிகிறது இவர்களிடம் மலிவாகப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில்வியாபாரிகள் அதிக நாட்டம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது. (உ- 79)

## விடுதியில் இருந்த பெண்கள் கைது

(கொழும்பு)

சீனர் ஒருவரின் மேற்பார்வையில், வெள்ளவத்தைப் பகுதியில் இயங்கி வந்த விடுதி ஒன்றில் இருந்து, தவறான நடத்தைகொண்ட பெண்கள் ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் மூவர் சீனப் பெண்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது. [உ-9]

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தந்தை செல்வாபுரம் கந்தசாமிவிளையாட்டரங்கு அமைப்பதற்கென பன்முகப்படுத்தபட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து. தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரியினால் 2 இலட்சம் ரூபாவும் மாநகர முதல்வர் என். ரவிராஜ் இனால் ஒரு இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ)

## கலந்து உரையாடல்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது. [உ-12]

## திங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வியாழனன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட தபால் பொதிகளில் விநியோகிக்கப்படாதவை இன்று முதல் விநியோகிக்கப் படும் என தபாலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ-42]

## திருட்டு

(கோப்பாய்)

கடந்த வியாழக்கிழமை இரவு ஊரெழு கணேச வித்தியாலயத்தின் அதிபர் காரியாலயம் உடைக்கப்பட்டு திருட்டுக்குள்ளாகியுள்ளது.

இது பற்றி வித்தியாலயஅதிபர் இ. குலசிங்கம் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிமனையிலும் சுன்னாகம் பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளார். (உ-79)

## வீதி திருத்தம் இல்லை

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு மணல்காட்டு வீதி திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் இவ்வீதியால் பிரயாணம் செய்வோர் பெரும்சிரமத்தை எதிர் நோக்குகின்றனர். (உ-42)

## திறப்பு விழா

(சங்கானை)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் அமைக்கப்பட்ட 'மாதிரி விற்பனை நிலையம்' கடந்த வியாழனன்று சங்கத் தலைவர் அ. அரியரத்தினம் தலைமையில் நடை பெற்றது.

இத் திறப்பு விழாவில் பிரதமவிருந்தினராக வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ. கு. சண்முகநாதனும், வலி. மேற்கு பிரதேச செயலர் என். வேதநாயகனும் கலந்து கொண்டனர். (உ-ப-18)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த இலங்கை மின்சார சபையின் வேலணை அலுவலகம் தற்பொழுது ஊர்காவற்றுறை வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ் அலுவலகத்தை மின்சார சபையின் வடமாகாண பொதுமுகாமையாளர் முத்துரத்தினாந்தம் திறந்து வைத்தார். (செ-104)

## சகோதரர் கைது

(கொழும்பு)

திருமண வீட்டில் கலந்து கொள்ளச் சென்ற மட்டக்களப்பைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரை பதுளை பொலிஸார் கைது செய்து தடுத்துவைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

கடந்த 27 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த வி. கிருஷாந்தி (வயது-25) வி. சிறிஸ்கந்தராசா (வயது-21) ஆகியோரென தெரியவந்துள்ளது. (உ)

### எமது சமய வழிபாடுகள்

# தேசிய கலை பண்பாட்டின் பிறழ்வுக்கு வித்திடக் கூடாது

## யாழ் ஆயர் எடுத்துரைப்பு

(ஈச்சமோட்டை)

தேசிய கலை பண்பாட்டு வடிவங்களை உள்ளடக்கி எமது சமய வழிபாடுகளும் அமைதல் சிறப்பானதாகும். ஒரு இனம் தனது மிகப்பிரதானமான மொழி, கலாசார அடையாளங்களை பிறழ்வு அடையாத வண்ணம் சமய வழிபாடுகளில் ஈடுபட வேண்டும்.

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் கத்தோலிக்க மறைமாவட்ட கலை பண்பாட்டு ஆணைக்குழுவினரால் நடத்தப்பட்ட கலைஞர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;- இரண்டாம் வத்திக்கான்சங்கத்தின்பின்கத்தோலிக்கஉலகில்மிகப் பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டது.

அன்னிய மொழிகளில் கிறீஸ்தவ மதத்தை வழிபட்டு வந்தவர்கள் இதன் பின் தத்தமது தேசிய மொழிகளிலும் தேசிய கலை பண்பாட்டுக்கு உட்பட்டும் இறை வழிபாடுகளை நடத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இதன்படியே தமிழ் கலாசாரங்களை பிரதிபலிக்கும் முகமாக எமது கத்தோலிக்க இறைவழிபாடுகளும் அமைந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அந்த வகையில், விழாக்களின் போது நிறைகுடம் வைத்தல், ஆரத்தி எடுத்தல், சந்தனப் பொட்டிடுதல், மாலை அணிவித்தல், பொங்கல் விழாச் செய்தல், ஆடையணிதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு எமது தேசிய பண்பாடு இறைவழிபாட்டுடன் இணைந்திருப்பது தமிழ் கத்தோலிக்கர்கள் மத்தியில் மிக ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

இதைத் தொடர்ந்து உரையாற்றியயாழ். மறைமாவட்ட கலை பண்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் அருட்தந்தை ஜெரோ செல்வநாயகம் அடிகளார் தெரிவிக்கையில்,

எமது கலாசார பண்பாடுகளைப் பேணிக் கொண்டு சர்வமத ஒற்றுமை பிசகாமல் எமது இறை உணர்வைக் கட்டியெழுப்ப வேண்டும். இதுவே எமக்கு வந்திக்கான் கூறும் செய்தி.

எமது தமிழ் கலாசாரத்தில் தற்போது அருகிவரும் நாட்டுக்கூத்து, பொம்மலாட்டம், தெருக்கூத்து, நாட்டார் பாடல்கள் போன்றவற்றையும் நாம் வளர்த்தெடுப்பதில் பாடுபட வேண்டும்.

இதற்கு செய்தி ஊடகங்களானபத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி போன்றவை ஆன்மீக நெறியை கலாசார பண்பாடு குலையாது ஊட்டும் பணியில் ஈடுபடுவது இன்றைய காலகட்டத்தில் இன்றியமையாதது என்றார். (உ-59)

## இராசி பலன்

29-01-2001
(தை 16, திங்கள்)
பஞ்சமி பி இ 3 07 வரை
உத்தரட்டாதி பி. இ 4 03
ராகுகாலம் 8.06- 9.36
நல்லநேரம் 12.36- 2.06
சித்தம்.

**மேடம்**
தனவிரயம், கோபப்படுதல், பிதா சிந்தை, பிரயாணம்.

**இடபம்**
மன மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, காரியம் கைகூடும், கீர்த்தி.

**மிதுனம்**
முயற்சிகைகூடும், தொழில் சிறப்பு, பணியாளர் உதவி, வியாதி.

**கடகம்**
கட்டுப்பாடு, பிரயாணம், உடல் உபாதை, பயந்தசுபாவம்.

**சிங்கம்**
நோய் ஏற்படல், எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், காரிய தாமதம்.

**கன்னி**
போசன சுகம், கௌரவம், வாகன வசதி, தனலாபம்.

**துலாம்**
புதிய தொழில் முயற்சி, சத்துரு ஜெயம், நோய்குணமடைதல், மனமகிழ்ச்சி.

**விருச்சிகம்**
விரும்பிய இடம்போக முடியாமை, மதிப்புக் குறைவு, சோகம், வியாதி.

**தனுசு**
பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக் குறைவு, தாய் வழி உறவு, காரிய தாமதம்.

**மகரம்**
காரியம் கைகூடும், தன வரவு, பிரயாணம், வாக்கு மேன்மை.

**கும்பம்**
வாக்குக் கலகம், பொருள் விரயம், மதிப்புக் குறைவு, காரிய தாமதம்.

**மீனம்**
ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், சயன சுகம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## கல்வயல், மட்டுவில் மத்தி மக்கள் விபரம் மீள் பதிவு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர்பிரிவிலுள்ள ஜே/305 கல்வயல், ஜே/ 312 மட்டுவில் மத்தி ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களின் ஆவணங்கள் பெற முடியாதிருப்பதன் காரணமாக குடும்பங்களின் விபரங்களைப் புதிதாகத் திரட்டும் முயற்சியில் இவ்விரு பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராமசேவையாளர் க. வாமதேவன் தற்போது ஈடுபட்டுள்ளார்.

குடும்பங்கள் மேற்படி பிரிவுகளில் மீளக்குடியமர உதவும் பொருட்டு முழுமையான குடும்ப விபரங்கள் திரட்ட வேண்டியுள்ளதால்வலிகாமம் பிரதேசத்திலுள்ளோர் இணுவிலில் இயங்கி வரும் தென்மராட்சி பிரதேச செயலர் பணிமனையில் கிராம சேவையாளர் வாமதேவனையும்,

வடமராட்சி பிரதேசத்தில் தங்கியிருப்போர் நெல்லியடியிலுள்ள தென்மராட்சி பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. சிவகணநாதனையும் அவசரமாகச் சந்திக்கும்படி கேட்டுள்ளனர். (உ-77)

## முன்னாள்தொண்டரினால் அதிபர்கள் திண்டாட்டம்

(கோப்பாய்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டு பாடசாலை அதிபர்கள் ஊடாகவிண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து வழங்குமாறு பணிப்பு விடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதையடுத்து, 90 ஆம் ஆண்டு தொடக்கம் கடமையாற்றி 97 ஆம் ஆண்டுக்குட்பட்ட பகுதியில் விலகிச் சென்றதாகக் கூறும் பலர் கொழும்பு, வவுனியா, திருகோணமலை போன்ற பகுதிகளிலிருந்தும் தற்போது வருகை தந்துள்ளனர்.

அக் காலப்பகுதியில் தாம் சேவையாற்றியதாகக் கூறி தமக்கான ஆவணங்களைத் தருமாறு அதிபர்களிடம் வற்புறுத்துவதாகவும் கூடுதலான பாடசாலைகளில் அவர்கள் காலத்து அதிபர்கள் ஓய்வு பெற்றும், இடமாற்றம் பெற்றும் சென்றுவிட்டதால் தற்போதைய அதிபர்கள் ஆவணங்கள் எதுவுமற்ற நிலையில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் அதிபர்கள் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது.

குறிப்பாகத் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தஅதிபர்களே இதுபோன்ற இடையூறுகளை எதிர்நோக்க வேண்டிய நிலையிலுள்ளதாக மேலும் அறியவருகிறது. (உ-79)

## பேராதனைப் பல்கலை வெளிவாரிப் பரீட்சைகள்

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

எதிர்வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தால் நடத்தவிருக்கும், வெளிவாரிகலைப் பீடமுதலாம் வருட பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டுமெனவும் 2000 ஆம் ஆண்டில் பதிவு செய்த மற்றும், 1996 ஜனவரியில் இருந்தும் அதன் பின்னர் பதிவைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் இப் பரீட்சைக்கு தோற்ற முடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதிவு காலாவதியாகியுள்ள விண்ணப்பதாரிகள் பதிவை புதுப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவத்தையும் பரீட்சை அனுமதிப் படிவத்தையும்இம் மாதம் 31ம் திகதிவரை பெற்றுக் கொள்ள முடியுமென்று பதிவாளர் அறிவித்துள்ளார். (உ-3)

## இன்று ஒரு தகவல்

### சோதிடம் மனதிற்கு ஆறுதல்

ஒருத்தர் மிகவும் நல்லவர். யார் எதைச் சொன்னாலும் அப்படியே நம்புகிறவர். அவர் கடற்கரையிலே போய் உட்கார்ந்து கொண்டு, கிழக்குத் திசையையே பார்த்துக் கொண்டிருந்தார். ''ஏன் நீங்கள் இப்படித் திடீரென்று கிழக்கைப் பார்க்கிறதற்கு ஆரம்பித்திருக்கிறீர்கள்'' என்று கேட்டார். இன்னொருவர், அதற்கு அவர் ஒன்றுமில்லை... எனக்குக் கிழக்குத் திசையிலேயிருந்து அதிர்ஷ்டம் வரப் போகிறது என்று சோதிடர் சொல்லியிருக்கிறார். அது தான், வருகிறதா வென்று பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றார்.

''ஐயா! இப்போதைக்குக் கிழக்குத் திசையிலேயிருந்து உங்களைத் தேடி அதிர்ஷ்டம் வரவில்லை. ஒரு நண்டு தான் வந்து கொண்டிருக்கிறது'' என்றார் இவர், உடனேவெடுக்கென்று காலை இழுத்துக் கொண்டு எழுந்து விட்டார் அவர்.

இந்தச் சோதிடம் என்பது பாபிலோனிலே பிறந்ததாக மேல் நாட்டு அறிஞர்களெல்லாம் கருதுகிறார்கள்! அப்பொழுதிருந்தே அதை நம்புகிறவர்களும் இருக்கிறார்கள். எதிர்க்கிறவர்களும் இருக்கிறார்கள். கிரோலமோ கார்டன் ஒரு உலகப் பிரசித்தி பெற்ற சோதிடர். 1552லே ஒரு நாள் அரண்மனையிலேயிருந்து அவருக்கு அழைப்பு வந்தது, இங்கிலாந்து மன்னர் ஆறாம் எட்வர்டு ஜாதகத்தைக் கணித்துக் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். மன்னருக்கு அப்பொழுது உடம்புசரியில்லாமலிருந்தது.

''கவலையே படாதீர்கள். இந்த ஜாதகருக்கு நீண்ட ஆயுளும், சந்தோஷமான வாழ்க்கையும் உண்டு. இன்னும் ஐம்பத்து மூன்று வருடம், மூன்று மாதம், பதினேழு நாட்கள் கழித்துத்தான் அவருக்குச் சில வியாதிகள் வரும்'' என்றார் சோதிடர்.

இவர் இப்படி சொன்ன முகூர்த்தம் .... ஒன்பது மாதம் கழித்து அந்த மன்னர் காலமாகி விட்டார். இது மாதிரி நிறைய நடந்து கொண்டு தானிருக்கிறது.

இருந்தாலும், பலவீனமான மனித மனதுக்கு சோதிடத்தில் நம்பிக்கை வைத்தால் தான் கொஞ்சம் ஆறுதலாயிருக்கிறது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ப. நோ. கூ. ச. களஞ்சியத்தில்
# பாவனைக்குதவாத அரிசி மீட்பு

### சுகாதாரபரிசோதகர்குழு அதிரடி நடவடிக்கை

(சங்கானை)

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சியத்திலும், அதன் வட்டுக்கோட்டைக் கிளைகள் இரண்டிலும் பெருமளவு பாவனைக்குதவாத அரிசி மூடைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 24 ஆம் திகதி புதன் கிழமை அப்பகுதி பொது சுகாதார பரிசோதகர் குழு மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது இவ் விடயம் அம்பலத்திற்கு வந்தது.

சங்கானை-தலைமைக்களஞ்சியத்தில் இருந்து சுமார் 50 மூடைகள் அரிசியும், வட்டுக்கோட்டை கிளைகள் இரண்டிலும் இருந்து சுமார் 65 மூடைகள் அரிசியும் இவ்வாறு மீட்கப்பட்டு விற்பனவுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாய் தெரிய வந்துள்ளது.

பாவனைக்குதவாத அரிசி விற்பனை குறித்து அடிக்கடி அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வந்தும் கூட மக்களின் உயிருடன் விளையாடும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அசமந்தபோக்குகுறித்து பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ள அதேவேளை, சுகாதாரப் பரிசோதகர் குழுவின் நடவடிக்கையை பெரிதும் வரவேற்றுள்ளனர்.

(உ-ப-18)

# 11 தமிழ்க்கட்சிகளும் ஜனாதிபதியைச் சந்திக்கும்

(கொழும்பு)

தற்போது இடம் பெற்று வரும் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி வரும் 11தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை விரைவில் சந்திக்கவுள்ளது.

இத்தேவேளை தமிழீழவிடுதலைப புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்புக்கு அரசாங்கம் செவி சாய்த்து யுத்த நிறுத்தத்தை அறிவிப்பதற்கு வசதியாக சர்வதேச அழுத்தத்தைக் கொடுப்பதற்கு வெளிநாட்டுத் தூதுவர்களையும் இக் கூட்டமைப்பினர் சந்தித்துவருகின்றனர்.

இத்தகைய சந்திப்பின் ஒரு கட்டமாக எதிர் வரும் ஆறாந் திகதி ஜப்பான், அவுஸ்ரேலியா, ரஷ்யா நாட்டுத் தூதுவர்களையும் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை புதுடில்லிக்கும் சென்னைக்கும் சென்று இந்தியத் தூதுவர்களையும் சநதிகக இக்கூட்டமைப்பினர் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# 3 ஆணைக்குழு அமைக்க ஆலோசனை நடந்தது

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு நீதிச் சேவை ஆணைக்குழு ஆகிய மூன்று ஆணைக் குழுக்களை அமைப்பது தொடர்பான முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை முக்கிய எதிர்க் கட்சி தலைவர்கள் கொழும்பில் நடத்தியுள்ளனர்.

பராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் இவ் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆணைக் குழுக்களை அமைப்பது தொடர்பாக ஊடகத்துறை, மற்றும் சிவில் அமைப்புக்களுடனும் கலந்தாலோசித்து அதன்பின் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இவற்றை சட்ட ஆவணமாகத் தயாரிப்பதற்கு தீர்மானம் ஒன்று இவ் ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் முக்கிய எதிர்க் கட்சித் தலைவர்களான ஐக்கியதேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி சிஹல உறுமயவின் தலைவர் திலக்கருணாரட்ன, ஜே. வி. பி. யைச் சேர்ந்த விமல் வீரவன்ச ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

# கரவெட்டிப் பகுதியில் போக்குவரத்துவசதியின்றி மக்கள் பெருஞ் சிரமம்

[கல்வயல்]

கரவெட்டி கப்பூது, யாக்கரை மண்டான் பகுதி பாடசாலை மாணவர்களும்பொது மக்களும் போக்கு வரத்து வசதியின்றி பெரும் சிரமத்திற்குள்ளாகுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்குச் செல்லும் 765 ஆம் இலக்க பேருந்துச் சேவையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தனியார் சிற்றூர்திச் சேவையும் இடம் பெறுவதில்லை. இக்காரணங்களால் இப்பகுதி மாணவர்களும், மக்களும் போக்கு வரத்துச் செய்வதற்கு பெரிதும் சிரமமுறுகின்றனர்.

போக்கு வரத்துச் சபையினர் இப் பகுதிகளுக்கு குறுந்தூர சேவைகளையோ அல்லது யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துகளில் சிலவற்றையாவது இப்பாதைகளில் சேவையில் ஈடுபடுத்தினாலே இப் பகுதி வாழ் மக்களின் போக்குவரத்துச் சிரமம் ஓரளவு குறையும் என பொதுமக்கள் தரப்பில் கருத்து தெரிவிக்கப்படுகின்றது. (செ-111)

# தொலைபேசி செயலிழப்பு

(சுன்னாகம்)

சுன்னாகத்தில் பொருத்தப்பட்டுள்ள நாணயக் குற்றித் தொலைபேசி செயலிழந்துள்ளது.

அண்மைக் காலமாக இத் தொலைபேசி செயலிழந்துள்ளமையால், பாவனையாளர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (உ-25)

# அஹிம்சாவாதி அநீதியான முறையில் கத்தியால் குத்தி கொலை

(இரத்தினபுரி)

இரத்தினக் கல் வர்த்தகர் ஒருவர் கடந்த புதன்கிழமையன்று இனந்தெரியாதோரினால் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி தேவாலய வீதிக்கும்பஸ்நிலையவீதிக்கும் இடையில் உள்ள மேற்படி வர்த்தகரின் வீட்டிலேயே இந்தப் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இரத்தின புரி அஹிம்சை வாதிகளின் சங்கத்தலைவரும் வர்த்தகருமான மஹிந்த அபேசுந்தர (வயது 56) என்பவரே இவ்வாறு அநீதியான முறையில் கொலை செய்யப்

# யா.மாவட்ட மேல்நீதிமன்ற பணிகள் நாளை ஆரம்பம்

[ஈச்சமோட்டை]

யாழ். மாவட்ட மேல் நீதி மன்றம் நாளை செவ்வாய்க் கிழமைஉத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படும் என யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற பதி

நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கும் ஏற்பாடும் மேற் கொள்ளப்படும் என உறுதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற வட்டாரங்கள் தக

# வீதிகளில் வியாபார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம்

### பரு.நகரசபை அறிவுறுத்தல்

(மந்திகை)

கள் மேற்கொண்டு வருகின்

வீதிகளில்

# வியாபார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம்

## பரு.நகரசபை அறிவுறுத்தல்

(மந்திகை)

பருத்தித்துறை மீன் சந்தைப் பகுதிகளில் உள்ள வீதிகளில் வியாபார நடவடிக்கை மேற் கொள்ள வேண்டாமென பொதுமக்களை நகரசபை உபதலைவர் நா.மணிவண்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

மீன்சந்தைக்கு முன்னால், 1ம் குறுக்குத் தெரு, மற்றும் சந்தைப்பகுதிகளை இணைக்கும் வீதிகளில் வியாபார நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் சந்தைப்பகுதியில் தேவையற்ற விபத்துக்களும், முரண்பாடுகளும் ஏற்படுவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும்,

இத்தகைய சம்பவங்களிலிருந்து பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளவே இந்நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-23)

# சாவகச்சேரி செல்ல விரைவில் அனுமதி

## வணிகர்களுக்கு உறுதி!

(மந்திகை)

சாவகச்சேரி வணிகர்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு சென்று தமது கடைகளை பார்வையிடவும் சேதமடைந்த தளபாடங்கள் மற்றும் ஆவணங்களை மீட்பதற்கும் அனுமதிதருமாறு படைத்தரப்பினரிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கடந்த 23ம் திகதி சங்கத்தின் உப தலைவர் சி. சிறிப்பிரகாஸ் 52வது படைப்பிரிவின் தளபதியுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நீண்ட நேரபேச்சின் பின்னர் இதுதொடர்பான அனுமதியினை மிக விரைவில் வழங்குவதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை

மேற்படி சங்கத்தில் அடங்கியுள்ள 350 அங்கத்தவர்களை விட, வேறு நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள் சாவகச்சேரி செல்ல அனுமதி கோரியிருப்பதும் குறுப்பிடத்தக்கது.

(உ-23)

# பணிகள் நாளை ஆரம்பம்

[ஈச்சமோட்டை]

யாழ். மாவட்ட மேல் நீதிமன்றம் நாளை செவ்வாய்க்கிழமைஉத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படும் என யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற பதிவாளர் அண்ணா ராஜேந்திரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதிப்பகுதியில்அமைந்துள்ள இந் நீதிமன்றக் கட்டடத்திற்கு அம்பாறை, வவுனியா யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா அரசாங்க தரப்பு சட்டத்தரணிகள் சகிதம் வருகைதந்து பணிகளை ஆரம்பித்து வைப்பார்.

யாழ். மாவட்ட மேல் நீதிமன்றஆரம்பமாகவிருப்பதையடுத்து, யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் சுகாதார மேற்பார்வையாளர் அ. ஆரோக்கியநாதன்தலைமையில் நீதிமன்ற வளவு மற்றும் வீதியோரப் பகுதிகளை துரிதகதியில் துப்பரவு செய்து வருகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி யாழ் மாவட்ட மேல் நீதிமன்றக் கட்டடப் பகுதியைப்பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்க யாழ். நகர பிதா இ. ரவிராஜ் சமுகமளித்து அவ்விட நிலமைகளை அவதானித்தார்.

மாநகர பிதா இ. ரவிராஜ் இன் பணிப்பின் பேரில் நீதிமன்ற வளாகத்தில் தற்காலிக நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கும் ஏற்பாடும் மேற் கொள்ளப்படும் என உறுதி வழங்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(உ-59)

இடம் பெற்றுள்ளது.

இரத்தின புரி அஹிம்சை வாதிகளின் சங்கத்தலைவரும் வர்த்தகருமான மஹிந்த அபேசுந்தர (வயது 56) என்பவரே இவ்வாறு அநீதியான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். (உ-9)

# உரும். செல்வபுரத்தில் இலைக்கஞ்சித் திட்டம்

## வடமாநில இ.மா.ம. ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் செல்வபுரத்தில் இன்று வடமாநில இந்துமாமன்றத்தினால் இலைக்கஞ்சித்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது,

நல்லை ஆதீன முதல்வரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்விலைக்கஞ்சித் திட்டம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைமுறைப்படுத்தப்படும்.

இதேவேளை அப்பகுதி மாணவர்களுக்கு பாடக்கொப்பிகளும் இலவசமாக வழங்கப்பட்டன, (ந

# வியாபாரிகள் விஷமத்தனம்

## சைவமக்கள் பெரும் விசனம்

(கல்வயல்)

வியாபாரிகள் தமது வியாபாரத்தைப் பெருக்குவதற்காக பல கவர்ச்சிகரமான விளம்பரங்களை செய்து வருகின்றனர்.

அதில் சிலவியாபாரிகள் வல்லை முனீஸ்வரர் ஆலயம், விநாயகர் ஆலயம் அமைந்துள்ள பகுதியிலுள்ள தலவிருட்சமாகிய மருதமரத்தில் தகடுகளில் பொறிக்கப்பட்ட வர்த்தக விளம்பரங்களை ஆணியறைந்து வைத்துள்ளனர்.

சைவப் பெரும் மக்கள் தொட்டு வணங்கும் இவ்விருட்சத்தில் செய்யப்பட்டுள்ள வியாபாரிகளின் இவ்விஷமத்தனம் மனம் புண்படும் செயலாகும் என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

[செ-111]

## உலக தரிசனம்

சீனாவில்

# அரச பணியில் இருக்கும் தீவிரவாதிகளை வேலையிலிருந்து அகற்றும்படி உத்தரவு

(பீஜிங்)

சீனாவில் சலோங்வொங் தீவிரவாத சமய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அரச உத்தியோகத்தில் இருந்தால் அவர்களை வேலையிலிருந்து நீக்குப்படி அரசு பணித்துள்ளது.

புதுவருட தினத்தன்று சியனம்மன்சதுக்கத்தில் ஒட்டுமொத்தமாக நால்வர் தீமூட்டித் தற்கொலை செய்ய முற்பட்டு ஒருவர் இறந்தார்.

இதன் காரணமாக சியனமமன் சதுக்கம் பொலிஸாரால் பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டிருக்கிறது. பார்வையாளர்கள் பலத்த சோதனைகளுக்கு மத்தியில் விடப்படுகிறார்கள். சலோங்வொங் தீவிரவாதிகள் யாரும் சதுக்கத்துள் செல்லாதவாறு மிகுந்த பாதுகாப்பு நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

திரும்பவும் இத்தீவிரவாத இயக்கத்தினர் ஒட்டுமொத்த தீக்குளிப்பில் இறங்கி விடுவார்களோ என்ற பயத்தில் சீன அரசு இருக்கிறது.

இதேவேளை சதுக்கத்துக்குச்செல்லும் சுரங்கப்பாதைகளும் மூடப்பட்டுள்ளன. சீருடையணியாத பொலிகஸார் தீவிர கண்காணிப்புக்களில் ஈடுபட்டுள்ளனர். (து)

## தமிழகத்தில் மூவர் கைது

(லண்டன்)

தமிழ்நாடு நாகர்கோவில் பகுதியில் வைத்து மூன்று விடுதலைப்புலி உறுப்பினர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்திய கியு பிரான்ஞ் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்ட இவர்கள், தற்பொழுது தடுத்துவைக்கப்பட்டுவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ)

பிலிப்பைன்ஸ்

## இராணுவத்தில் உட்பூசல் இல்லை வதந்திகளை மறுக்கிறார் அறாயோ

(மணிலா)

பிலிப்பைன்ஸ் இராணுவத்தில் உட்பூசல்கள் எதுவும் ஏற்பட விடமாட்டோம் என்று அதிபர் அறாயே தெரிவித்தார்

பத்திரிகைகளில் இது தொடர்பாக வந்த செய்திகளைத் தான் மறுப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத்தினருக்கு அறிவுறுத்தல் கொடுக்கையில் கம்யூனிஸ்டுகளின் கிளர்ச்சிக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளின் கிளர்ச்சிக்கும் தகுந்த பதிலடிகள் கொடுக்க வேண்டுமென்றும் அதிபர்கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தொடர்கையில் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் எந்த சக்திகளையும் அடக்குவதற்கு இராணுவம் தயாராகஇருக்க வேண்டும் என்றும் நாட்டின் இன ஒற்றுமைக்கு இராணுவம் பாடுபட வேண்டும் என்றும் அதிபர் கேட்டுக் கொள்கிறார். [து]

## ஜப்பானில் கடும் பனி நால்வர்குளிரில்உயிரிழப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் ஏற்பட்ட கடும் பனியினால் நான்கு பேர் இறந்து விட்டனர்.

தலைநகர் டோக்கியோவிலும் அதனை அண்டிய நகரங்களிலும் கடும்பனி வீசியதாகவும் இதனால் வீதிகளில் வாகனப் போக்குவரத்து நடைபெறவில்லை.ரயில் போக்குவரத்துகள் முற்றாகத் தடைப்பட்டன.

இதேவேளை ஜப்பானில் நானூறுக்கு மேற்பட்ட விமான சேவைகள் நடைபெறவில்லையென அறிவிக்கப் படுகிறது.

இந்தவாரம் இன்னும் பனி மூட்டம் கூடுமென்று தெரிவிக்கப்படுகிறது. [து]

குஜராத்தில்

## ஐந்நூறு மாணவர்கள் கட்டடத்தில் இறந்தனர்

(புதுடில்லி)

ஒரே கல்லூரியைச் சேர்ந்த ஐந்நூறுக்கு மேற்பட்டமாணவர்கள் இறந்துள்ளனர்.

குஜராத்தில் நடந்த நில அதிர்வினால் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஐந்நூறுக்கு மேற்பட்டமாணவர்கள் அப்படியே கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் மரணமானார்கள்.

இதேவேளை,இந்தியக் குடியரசு தினத்திற்காக மாணவர்கள் ஒரு குறுகிய வீதியால் அணிவகுத்துச் சென்ற போது பக்கத்திலுள்ள பெரும் சுவர் பாறி வீழ்ந்ததில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் மாண்டு விட்டனர். (து)

## இறந்தோருக்கு கோபி அனன் அனுதாபம்

[ஜெனிவா]

இந்தியாவில்ஏற்பட்ட நிலை நடுக்கததால் உயிரிழந்த பல்லாயிரக் கணக்கானோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக ஐ.நா. சபையின் பொதுச் செயலர் கோபிஅனன் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தான் மக்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உலக நாடுகள் இயற்கை உதவிகளைக் கொடுக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார். (து)

வீரப்பனை மன்னித்தால்

## நெடுமாறன் காட்டுக்குள் சென்று பேச்சு நடத்துவார்

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு பொது மன்னிப்பு வழங்க அரசுகள் முன்வருமானால் தான் திரும்பவும் காட்டுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று பழநெடுமாறன் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களுக்கு தெரிவிக்கையில் தமிழர் தேசியக்கட்சி பழநெடுமாறன் பூலான் தேவி போன்றவர்களுக்கு பொதுமன்னிப்பு மத்திய அரசும் மாநில அரசும் கொடுக்கவில்லையா அவர் பிறகு அரசியல் நீரோட்டத்தில் சேரவில்லையா அதே போன்று சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கும் கர்நாடக அரசும் தமிழக அரசும் மன்னிப்புக் கொடுக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, வீரப்பனுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று இருமாநிலப் பொது மக்களும் விரும்புவதாகவும் காட்டுவாழ் மக்களும் விரும்புவதாகவும் தெரிவித்தார். (து)

## முறையற்ற பண வசூல் ஈ.பி.டி.பி. அமைப்பு வன்மையாக கண்டிக்கிறது

(யாழ்ப்பாணம்)

அரசியல் கட்சிகளின் சில உறுப்பினர்கள் முறையற்ற பண வசூல் போன்ற விரும்பத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக அறிகிறோம். இது மிகவும் கவலைக்குரியதும் வன்மையான கண்டனத்திற்குரியதுமாகும்.

'மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த வேண்டாம்' என்ற தலைப்பில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அச்செய்திக் குறிப்பில் மேலும்,

பரவலான உயிர், உடமை இழப்புக்களைச் சந்தித்தும் நாளாந்த வாழ்க்கை அவலங்களுக்கு முகம் கொடுத்தும் அல்லற்படும் மக்களின் மீது மேலும் துன்பங்களைச் சுமத்துவதாகவே இத்தகைய செயல்கள் அமைகின்றன.

முறையற்ற விதத்தில் மக்களைத் தொந்தரவுக்கு உள்ளாக்கும் இத்தகைய சக்திகளை ஆயுதக் குழுக்கள், துணைப்படையினர் என அடைமொழிகளால் பூடகமாகக் குறிப்பிடப்படுவதனால், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தொழிற்படும் அரசியல் கட்சிகள் பலவும் அநாவசியமான அசௌகரியங்களுக்கு இலக்காக நேர்கின்றது.

இதனால் நேர்த்தியான வேலைத்திட்டங்களுடன் சேவை புரியும் சக்திகள் மீது அநாவசியமான முறையில் களங்கம் கற்பிக்கப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஒழுங்கான மின்சாரம் கிடைக்குமா?

(செம்பியன்பற்று)

வடமராட்சிப் பகுதியில் தொடர்ச்சியான மின்வெட்டு இடம்பெறுவதால் மின்பாவனையாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

ஒவ்வொருநாளும் சுமார் எட்டு மணி தொடக்கம் பத்து மணித்தியாலம் வரை மின்வெட்டு இடம்பெறுகின்றதனால் மின்சாரத்தை நம்பி ஒரு காரியத்தையும் மேற்கொள்ள முடியாதுள்ளதென இப்பகுதி மின்பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-42)

மிர் விண்வெளி

## ஆய்வு நிலையத்துடன் ரஷ்யக் கலம் இணைந்தது

(மொஸ்கோ)

ஆளில்லா ரஷ்யாவின் சரக்கு விண்வெளிக்கலம் மிர்விண்வெளிநிலையத்துடன் இணைந்து விட்டது.

நூற்றுமுப்பது மெற்றிக்தொன் மிர் விண்வெளிக் ஆராய்ச்சி நிலையத்தை பசுபிக் சமுத்திரத்தில், மூழ்கடிக்கும் வேலையை இது செய்யஇருக்கிறது

1986 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையம் துருப்பிடித்துப் பகுதி பகுதியாகச் செயலிழக்கத் தொடங்கியுள்ளது. இது பூமியில் நகரங்களுக்கு மேல்விழுந்து பாதிப்பு ஏற்படுத்தாமல் பசிபிக் சமுத்திரத்தில் வீழ்த்தப்படும்.

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இது மூழ்கடிக்கப்படுமென்றுதெரிவிக்கப்படுகிறது. [து]

## ஸ்ரீ. மு. கா. கட்சியின் இணைத்தலைவர் பதவி நீடிக்க வேண்டும்

### திருமதி பேரியல் அஷ்ரப் விருப்பம

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் இணைத்தலைமைப் பதவி தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்று அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின் போது முஸ்லிம்காங்கிரஸின் இணைத் தலைவர்களில் ஒருவரான திருமதி பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

திருமதி பேரியல் அஷ்ரப் பத்திரிகையாளர் மத்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பேச்சுவார்த்தைகள் மூலம் தலைமைப் பதவியைத்தெரிவு செய்வதென்றும், இணைத் தலைமை மேலும் சிறிது காலம் தொடர வேண்டும் என்றும் கூறினார்.

மறைந்த தலைவர் அஷ்ரப்பின் கொள்கைகளை அமுல் செய்வதும்யுத்தத்தால்பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளைப் புனர் நிர்மாணம் செய்வதுமே எமது பணியாக இருக்க வேண்டும்மென்றும் அவர் தெரிவித்துள்ளார், [வ]

## இருவர் கைது

(மன்னார்)

மன்னாரில், கடந்த புதனன்று முச்சக்கர வண்டிகளுக்கு பயன்படுத்தப்படும் பெருமளவு உதிரிப்பாகங்களோடு இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

உலகப்

## பொருளாதார மகாநாட்டை குழப்ப முயன்றவர்கள் விரட்டியடிப்பு

சுவிற்சலாந்தில் உலகப் பொருளாதார மகாநாட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் குழப்ப முற்பட்டனர்.

சுவிற்ஸலாந்து பேவூட் நகர் பனிச்சறுக்கு மைதானத்தில் உலகப் பொருளாதார மகாநாடு நடந்துகொண்டிருந்தது அவ்வேளை இருநூற்றுக்கு மேற்பட்ட ஆர்பாட்டக்காரர்கள் கூட்டத்தைக் குழப்பமுற்பட்டனர்.

இவர்கள் முதலாளித்துவ கொள்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டுமுகமாக இதனை செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களை பேவூட் நகரிலிருந்து அகற்றவும்,வராது தடுக்கவும் வீதிகளில் பெரும் தடைகளைப் போட்டு தண்ணீரை குழாய்மூலம்பாச்சியும்பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைத்து தடுத்தனர்.

பேவூட்நகருக்குள் ரயிலையும் வர விடாது தடுத்து ஆர்ப்பட்டக் காரரை வெளியே நிற்கவைத்தனர், காவல் துறையினர்

உலகப் பொருளாதார மகாநாட்டில் தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டனர். (து)

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து
- குறள் -

# வலம்புரி

## பாரபட்சம் காட்டுவது எதற்காக?

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களில் மகாணத்திற்கு வெளியில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட வைத்தியர்களுக்கு மட்டும் அரசாங்கம் 2000 ம் ஆண்டுக்கான விசேட மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது அதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட-இங்கு கடமையாற்றும் வைத்தியர்களுக்கு விசேட மேலதிகக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

யுத்தத்தின் கோர தாண்டவத்தின் மத்தியிலும் தம்முயிரையும் மதியாது பிறர் உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் வடக்குக்கிழக்கு வைத்தியர்கள் இவர்களின் சேவையின் மகத்துவத்தை வெறும் மனித மொழிகளினால் கூறிவிட முடியாது.

இந்நிலையில் அவர்களுக்குள் பாரபட்சம் காட்டி ஒரு சாராருக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்குவதும் மறு சாராரை புறந்தள்ளி விடுவதும் மருத்துவ சேவையில் பெரும் பாதக விளைவை ஏற்படுத்திவிடும்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தை நிரந்தரவதிவிடமாகக் கொண்ட வைத்தியர்கள் பலர் இம் மண்ணில் நிம்மதியாக வாழ முடியாதென்ற கோதாவில் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாண மருத்துவ பீடம் உருவாக்கிய நம் தமிழ் அன்னையின் மைந்தர்கள் - யாழ் போதனா வைத்தியசாலையில் தமிழ் உயிர் - உடல்களை ஆய்வு கூடத் தவளைகளாகக் பயன்படுத்தி மருத்துவ அறிவை பெற்ற செல்வர்கள் பலர் தம் தேசம், தம்மண், தம்மக்களென்றதாயகஉணர்வை உதறித் தள்ளிவிட்டு, கற்ற நன்றி மறந்து கப்பல் ஏறிச் சென்று விட்டனர்.

ஆனால் இன்னமும் மண் பாசத்துடன், மக்கள் உயிர் காப்பதற்காக கிடைக்கக் கூடிய வசதிகளையும் துறந்து யுத்த பூமியிலேயே தாங்களும் வாழ்ந்து வைத்தியசேவை நல்கி வருவோருக்கு விசேட கொடுப்பனவை அரசு வழங்க மறுப்பது இருக்கின்ற வைத்தியர்களையும் இம்மண்ணிலிருந்து வெளியேற்றிவிடும் நோக்கமென்றே கருத வேண்டியுள்ளது.

# பசளைகளின் விலை உடனடியாகக் குறைப்பு

### கமநல சேவை ஆணையாளர் தகவல்

(தென்மராட்சி)

யாழ் மாவட்டத்திற்கான கப்பல் கட்டணம் தற்போது குறைக்கப்பட்டுள்ளமையினால் விவசாயிகளுக்கான பசளைகளின் விற்பனை விலைகள் உடனடியாகக் குறைக்கப்பட்டுள்ளன. என சமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இதுவரையும் 670 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட யூரியா 630ரூபாவாகவும், 850 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட அமோனியா 810 ரூபாவாகவும், ஆயிரத்து 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பி-1 ஆயிரத்து 150 ரூபாவாகவும் கமநலசேவைகளில் விற்பனை செய்யப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகள் தமக்குத் தேவையான பசளையை கொள்வனவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார் (உ-77)

# பயண அனுமதி பார்க்கச் சென்றோரின் பணம், நகை கொள்ளை

(கொழும்பு)

யாழ். விமானப் பயணத்துக்கான பாதுகாப்பு அனுமதி பார்க்க இரத்மலான சென்ற இருவரிடம், இராணுவத்தினர் போல் வேடமிட்டவர்கள் பணம், நகை என்பவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

மேற்படி இருவரையும் சோதனையிட வேண்டும் என்று அழைத்துச்சென்று தனியான ஓரிடத்தில் வைத்து அவர்கள் வசமிருந்த பெறுமதிவாய்ந்த சொத்துக்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்களால் மொறட்டுவ பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

# அம்பனை, பன்னாலையில் பயன்தரு மரங்கள் அழிப்பு

### விறகு வியாபாரிகள் திருட்டுத்தனம்

(தென்மராட்சி)

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் அம்பனை, பன்னாலைப் பகுதிகளில் உள்ள பயன் தரும் பாரிய மரங்கள் விறகு வியாபாரிகளால் திருட்டுத்தனமாக வெட்டப்பட்டுவருகின்றன.

இதனைத் தடுக்க உடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அம்பனையில் இயங்கிவரும் மறவன் புலவு பாரதி சனசமூக நிலையத்தினர் வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாஸ்கரனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

அக்கோரிக்கையில், இப்பகுதியில் ஆட்கள் குடியிருக்கத் தடைவிதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள வீடுகளில் இருக்கும் முகட்டு ஓடுகள் தகட்டுஓடுகள், தீராந்தி நிலைகள் மற்றும் யன்னல் போன்றவற்றினையும் திருடர்கள் அபகரித்துச் செல்கின்றனர்.

ஆதலால் இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவோரை கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்கு ஏதுவாக தெல்லிப்பழை மாகஜனாக்கல்லூரிக்கருகில் ஒரு கண்காணிப்பு மையம் ஒன்றினை அமைக்கும்படி மறவன் புலவு பாரதி சனசமூக நிலையத்தின் தலைவர் செ ஆனந்த ரஞ்சன் பிரதேச சபைத் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-77)

முன்னறிவித்தல் இன்றி விடுமுறை

# சுகாதார பகுதி ஊழியர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### சுகாதாரகுழுக் கூட்டத்தில் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

சுகாதாரப் பகுதி ஊழியர்கள் முன்னறிவித்தல் இன்றி விடுமுறை எடுக்கும் பட்சத்தில் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதென கடந்த செவ்வாயன்று இடம் பெற்ற யா/மாநகர சபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுகாதாரப் பகுதி ஊழியர்கள் பற்றாக்குறையாகவுள்ள இச்சந்தர்ப்பத்தில் ஊழியர்கள் முன்னறிவித்தல் இன்றி விடுமுறை எடுப்பது மற்றும் கால தாமதமாக காரியாலயம் வருதல் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

உரிய நேரத்திற்கு கடமைக்குவராத ஊழியர்கள் விடயத்தில் மாநகர சபை இறுக்கமாக நடந்து கொள்ள வேண்டும் என சுகாதாரக் குழு உறுப்பினர் ஜீவரட்ணம் குறிப்பிட்டார்.

இவரது கூற்றில் உள்ள நியாயத்தன்மையை ஒப்புக் கொண்ட பதில் ஆணையாளர் தணிகாசலம்பிள்ளை அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது கட்டாயம் என்றுகுறிப்பிட்டார்.

அத்துடன் மேற்படி தொழிலாளர்கள் ஒவ்வொரு முறை விடுமுறை எடுக்கும் போது, அவர்களது ஓய்வூதியத்தில் ஒரு வீதம் இழக்கப்படுகிறது என்பதை மாநகர சபை உறுப்பினர்களே சம்பந்தப்பட்டவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும் பதில் ஆணையாளர் தெரிவித்தார். (உ-12-59)

# இணுவிலில் இயங்கும் சாவ. இந்து இடமாற்றம் இழுபறி நிலையில்

(சங்கானை)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியை இடமாற்றுவது குறித்து பலத்த இழுபறி நிலை தோன்றியிருப்பதாய் தெரியவந்துள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து மேற்படி பாடசாலை, இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன்கருதி தென்மராட்சியிலும், வலிகாமத்தில் யா/இணுவில் மத்திய கல்லூரியிலுமாக இயங்கி வருவது தெரிந்ததே.

இருப்பினும், இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கி வரும் மேற்படி பாடசாலையை மானிப்பாய் பகுதிக்கு மாற்றப்பட வேண்டும் என ஒரு சாரார் கருத்துக்கூறியதற்கிணங்க சாவகச்சேரியில் இருந்து ஒரு தொகுதி தளபாடங்கள் ஏற்றிவரப்பட்டன.

அந்நிலையில் மற்றொரு சாரார் இடம் மாற்றுவதல்ா ஏற்படும் பாதகபலன்களைக் கூறி தடுத்து வருவதாக கூறப்படுகிறது. (உ-ப-18)

# ஹக்கீம் தலைமையில் குழு

(கொழும்பு)

சுதந்திரமான விசாரணை ஆணைக் குழுவை அமைப்பதற்கான பிரேரணைகளை ஆராய்வதற்கென அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இதனை, அண்மையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் இடம் பெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி சந்திரிகா உறுதிப்படுத்தினார். (உ-4)

# சங்கேமுழங்கு

## க. பொ. த. (உயர்தர) பாடம் தெரிவுசெய்வதில் தடையா?

கடந்த காலங்களிலும் பார்க்க 2000 இல் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) தேர்வில் யாழ்.மாவட்டத்தில் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. அதிலும் சில குறிப்பிட்ட பிரபல பாடசாலைகளில் இவ்வீழ்ச்சி மிகவும் பொருண்மையுடையதாக உள்ளது. இது அப்பாடசாலைகளின் பிரமுகத் தன்மையைக் குறைத்துள்ளது. இப்பிரமுகத் தன்மையைக் கட்டியெழுப்புவதற்காக இரு பிரபல்ய பாடசாலைகள் ஒரு பிரபல்ய சூத்திரத்தைக் கண்டு பிடித்தது போல, மாணவர்கள் மீது குற்றம் சாட்டுவது போல், இனி வரும் காலங்களில் குறை அடைவைக் குறைக்க முடியும் என்னும் நோக்குடன் கடந்த வருடம் க. பொ. த. (சாதாரண) தேர்வுக்கு தோற்றியோரின் பெறுபேறுகள் வர முன்பே அவர்களுக்கு பாடசாலையில் நடத்தும் ஒரு தேர்வு மூலம் அவர்களது க. பொ. த. (உயர்தர) வகுப்புக்குரிய நெறியை அவர்களின் விருப்புக்கு மாறாகத் தெரிவு செய்யும் ஒரு கட்டாய நிலையை உருவாக்கியுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

உண்மையில் க. பொ. த, (சாதாரண) பெறுபேறுகளின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட நெறியைத் தொடர்வதற்குரிய அடிப்படைத் தகைமைகளைக் பெற்றிருந்தால் மாணவரின் விருப்பத்துக்கு அமைய அந்நெறியைத் தொடர உரிமையுண்டு. உதாரணமாக நடந்து முடிந்த க. பொ. த. (சாதாரண) தேர்வில், க.பொ.த. (உயர்தர) வகுப்பில் கணித பாட நெறியைத் தொடர்வதற்குரிய தகைமைகளைக் கொண்டிருப்பதுடன், கணித பாடத்தில் விசேட சித்தி பெற்றிருந்தாலும் கூட பாடசாலை நடத்தும் தேர்வில் சில வேளைகளில் சாதாரண சித்திக்குரிய புள்ளிகளோ அல்லது அதிலும் குறைவான புள்ளிகளோ பெற்றிருந்தால், ஒரு மாணவன் தனது விருப்பின்படி கணித பாட நெறியைத் தொடர முடியாத நிலையொன்று உருவாகும். இந்நிலைப்பாடு 11 ஆண்டுகள் கல்வி கற்ற பின் மாணவன் தோற்றுகின்ற தேசிய ரீதியான பொதுத் தேர்வின் பெறுபேறுகளின் நம்பகத் தன்மையைக் குறைப்பதாகவும், உதாசீனம் செய்வதாகவும் அமையும்.

இயற்கைச் சூழல், நுண்ணறிவு, இயக்கத் திறன்கள் ஆகியவற்றை மாணவன் வரமாகக் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் சூழல் உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்வதற்கு சம அளவில் சேவை செய்வதில்லை. என்பது கல்வி உளவியலாளர்களின் கருத்தாகும், சமூகத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான அரச நிறுவனமே பாடசாலையாகும். குறித்த காலத்தினுள் ஒவ்வொரு மாணவனுக்கும் திறன்களை வழங்கும் பொறுப்பு பாடசாலைக்குரியதாகும். இதற்குரிய தடங்கல்களை நீக்குவதே பாடசாலையின் தலையாய கடமையாகும். இத்தடங்கல்கள் பாடசாலை சார்பாகவேயிருக்குமே தவிர மாணவர் சார்பாக இருக்க முடியாது. அறிவையும், திறன்களையும் வழங்கும் முக்கிய பாத்திரமாகிய ஆசிரியர் பாலும், பாடசாலை நிர்வாகத்திலுமே முக்கியமாகச் சார்ந்துள்ளன எனலாம்.

உண்மையில் கல்வியின் வித்தியாசமான கட்டங்களில் எதிர்பார்த்த மட்டங்களை அடைவதற்கு மாணவர் தவறியமையின் உச்ச நிலைக்கு ஆசிரியர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

அதேவேளை பிரபல்ய பாடசாலைகளில் கற்பித்தலுக்குரிய வளம் பற்றாக் குறை இருக்குமெனக் கூறுவதற்கும் இடமில்லை. மேலும் அங்கு கற்கின்ற மாணவர்கள் 5ம் தர புலமைப் பரிசில் தேர்வில் சித்தியடைந்தவர்களாகவும் (சித்தியடைந்தவர்களே 6ம் தரத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர்) வசதி, வாய்ப்பு படைத்தவர்களாகவும் உள்ளனர். பாடசாலைகளில் கல்வியில் அடைவு மாணவர் சார்மான புறக் காரணிகளைவிட கூடுதலாக ஆசிரியர் பால் சார்வதால் கல்வில் உள்ள பிரமுகத்துவம் ஆசிரியர் பயிற்சியிலிருந்து நீக்கப்படாவிடின் குறை அடைவு நிலைத்திருக்கும்.

கல்வியில் சீர்திருத்தங்கள் காலத்துககுக் காலம் ஏற்படுவது கட்டாய தேவையொன்றாகும். அதற்கேற்ப கற்பித்தல் நுண்முறைகள் விரிவடைந்து கொண்டும், மாற்றம் அடைந்து கொண்டும் இருக்கின்றன. அதற்கேற்ற முறையில் பாடசாலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமே தவிர மாணவர் மேல் குற்றம் சாட்டுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இது கல்வி உளவியலைக் கற்றது தேர்வில் சித்தியடைவதற்கு மத்திரமேயன்றி நடைமுறைக்கன்றி என்பது போல் தெரிகின்றது. மாணவர் சார்பான கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் கல்வியலாளர்களினதும் கல்வி மான்களினதும் ஆழ்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடுகள் என்பதை சம்பந்தப்பட்டோர் உணருவது சாலச்சிறந்ததாகும்.

ச. செல்வராசா
(பெற்றார்)
இணுவில்.

# நாடு அபாயகரமான பொருளாதார அழிவை நோக்கிச் செல்கிறது !

## காமினி அத்துக்கொறள குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஆட்சியின்போது தான் நாடு அபாயகரமான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ளது இவ்வாறு ஐக்கியதேசியக்கட்சியின் உபதலைவர் காமினி அத்துக்கொறள அரசு மீது குற்றம் சாட்டியுள்ளார்.

குருநாகலில் ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்கள் மற்றும் எம். பிக்களுடனான சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. இச்சந்திப்பில் கலந்துகொண்ட கட்சியின் உபதலைவர் காமினி அத்துக்கொறள மேற்கொண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் கூறியதாவது.

இந்த அரசாங்கம் அமைச்சர்களைப் பெருமளவில் நியமித்ததாலும்தவறான கொள்கைகளினாலும் தான் இத்தகைய பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நாம் மிகவும் விழிப்பாகச் செயற்பட்டுநாட்டை அழிவுப் பாதையில் இருந்து மீட்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (வ)

## ஈழம் கோரிக்கையை...

எந்தவகையிலாவது சமாதானத்தை அடையவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். ஐக்கியதேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தமிழர்களை சிங்களவர்கள்படுகொலை செய்கிறார்கள் என்ற கருத்து நிலவிவந்தது ஆனால் எமதுஆட்சிக் காலத்தில் அந்தநிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

### அரசியலில் நான் சந்தர்ப்பவாதி அல்ல

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறி அமெரிக்கா, இத்தாலி, மலேசியா போன்ற நாடுகள் தடைவிதித்துள்ளது பிரித்தானியாவும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவுள்ளது பிரித்தானியாவும் தடைவிதிக்குமானால் புலிகளுக்கு பாரிய தாக்கம் ஏற்படும். இத்தகைய நிலையில் தான் விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

அரசியல் என்பது பொதுவாக சந்தர்ப்பவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் நான் அரசியலை சந்தர்ப்பவாதமாகக் கொள்ளாமல் அரசியல் நடத்திவருகிறேன்.

எமது நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே உள்ளோம். விடுதலைப்புலிகளிடம் ஐக்கிய தேசியக்கட்சி மூன்று தடவையும் நாம் ஒரு தடவையும் ஏமாந்தோம். ஆனால் மேலும் நாம் ஏமாறத்தயாரில்லை.

### நிபந்தனையை ஏற்றால் பேசத் தயார்

இத்தீர்வில் எமது நிபந்தனைகளை விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொண்டால் நாம் அவர்களுடன் பேசத் தயாராக உள்ளோம். சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றுக்கு புலிகள் முன்வரும் வரை அவர்களுக்கெதிரான யுத்தம் தொடரும்.

யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் நவீனரக ஆயுதங்களை அரசாங்கம் கொள்வனவு செய்து படையினருக்கு வழங்கியுள்ளது. இதனால் இராணுவத்தினரின் பலம் தற்போது மேலும் அதிகரித்துள்ளது.

ஆனையிறவு முகாமை படையினர் விடுதலைப்புலிகளிடம் தோற்றதினால் யுத்தத்திற்கான செலவு அதிகரித்துள்ளது இதனால் பொருளாதாரக் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது இது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தை விடக் குறைவானதாகவே உள்ளது.

யுத்தத்திற்கு முடிவுகட்டப்படுமனால் நாடு பொருளாதர நெருக்கடியில் இருந்து விடுபடக்கூடியதாக இருக்கும் இந்நிலையில் இந்நாட்டில் உள்ள சாதாரண சிப்பாயில் இருந்து சகல தரப்பினரும் யுத்தம் முடிவுக்குவரவேண்டுமென்பதையே குறிக்கோளாகக்கொன்டுள்ளனர்.

எமது நிலைப்பாடு குறித்து விடுதலைப் புலிகளுக்கு நோர்வே மூலம் தெரியப்படுத்தி உள்ளோம் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஆர்வம் காட்டுவதாகவும் தெரிகிறது என்றும் ஜனாதிபதி கூறினர். (வ)

### அஞ்சனாதேவி

கும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயம் பெருமை வாய்ந்தது இத்திருகோயிலுக்கு 22. 04. 1999 அன்று அடிக்கல் நாட்டு விழா இடம் பெற்றது, இவ்வாலயத்துக்கு மூலவிக்கிரமான 9 அடி உயரமுள்ள பக்தஹனுமான் சிலை இந்தியாவிலிருந்து கொண்டு வரபபட்டு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. ஊர்வலமாக இவ்வாஞ்சநேயர் சிலை எடுத்துவரப்பட்டபோது பல பிரதேச மக்களும் இவ்வாஞ்சநேயப் பெருமானைத் தரிசித்து அருள் பெற்றனர். இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஆஞ்சநேயர் அடியவர்களைப் பார்த்துக் கைகூப்பிய வண்ணம் பக்தஹனுமானாகக் காட்சியளிக்கின்றமை சிறப்புக்குரிய ஓர் விடயமாகும்.

### ஸ்ரீராம நாமம்

ஸ்ரீ ஆஞ்சநேயர் விடும் மூச்சுக் காற்றுக் கூட 'ராம ராம' என்று தான் ஒலிக்கும் அப்படிப்பட்ட ராம தியானம் அஞ்சநேயருடையது ஸ்ரீ ராம நாமம் எங்கு ஒலித்தாலும் அங்கே ஆஞ்சநேயர் வீற்றிருப்பார் ஸ்ரீராம பிரானைத் தரிசித்த அடியவர்கள் ஆஞ்சநேயரைத் தரிசிக்சாது சென்றால் அந்த வழிபாட்டால் எந்தவித பலனுமில்லை.

ஆஞ்சநேயர் வாக்கு வன்மை பெற்றவர், வாக்கு வன்மை பெற அஞ்சநேயரை வழிபடுவது சிறப்புமிக்க தன்றோ? தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தகமை கொண்ட ஆஞ்சநேயரை நாமும் ஸ்ரீ சுந்தரா ஆஞ்சநேய ராஜக்கண்டுஉள்ளத் தூய்மையுடன் வழிபட்டு நற்பலன்களை அடைவோமாக.

ஸ்ரீராம்! ஜயராம் ! ஜயஜயராம் !

### குஜராத்தில்

நிறைவேற்ற முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோப்பநாய்கள், நவீன கமராக்கள் சிறு முனகல் ஒலியையும் கண்டறியும் ஒலிவாங்கிகள் உட்பட பல வகைபுதிய கருவிகளுடன் சுவிற்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்தமீட்புப்பணி வல்லுனர்கள் தற்போது பாதிக்கப்பட்ட அஹமதாபாத் மற்றும் புஜ் நகரங்களில் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் இப்பகுதியில் எந்நேரமும் இன்னொரு பூமி அதிர்வு ஏற்படக்கூடிய வகையில், சிறிய சிறிய அளவில் பூமியதிர்வு லேசானதாக்கத்துடன் இடம்பெற்றவண்ணம் உள்ளது.

மீண்டும் பாரியதொரு பூமியதிர்வு இந்தியாவை உலுக்கும் சாத்தியம் மிக அதிகமாகவே உள்ளதாகவும் புவியியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ

### சிற்றி

வலம்புரிக்கு த்தெரிவித்தார்.

சுமார் 400 பயணிகளுடன் இன்று பி.பகல் திருமலையில் இருந்து புறப்படும் சிற்றி ஒவ் றிங்கோ மீண்டும் நாளை காங்கேசன்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கப்பல் சேவை வாரத்தில்திங்கள், புதன்ஆகியதினங்களில் திருமலையில் இருந்தும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் காங்கேசன்துறையில் இருந்தும் பயணிகளை ஏற்றிஇறக்கும் எனவும் கப்பல் சட்டணமாக ஜி எஸ்.ரி வரி உட்பட ஆயிரத்து 575 ரூபா அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### இனப்

நோர்வேயின் அனுசரணையுடன் விரைவில் எட்டப்படும் என்று கூறினார். (வ)


## உடன் தேவை

சிற்றூழியர்கள் தேவை

30 - 01 - 2001 மாலை 4 மணிக்குப் பின் நேரில் தொடர்பு கொள்ளவும்.

வலம்புரி
இல: 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.


## இன்று நேர் முகப் பரீட்சை

(திருமலை)

கல்வியல் கல்லூரிகளில் இருந்து பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறிய மாணவர்களுக்கு ஆசிரியர் பதவி வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை இன்று வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (வ)

## நண்பனை காப்பாற்ற முனைந்த மாணவன் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான் குடிக்கடலில் குளித்துக் கொண்டிருந்த சமயம்கடலலையால் அடித்துச் செலலப்பட்ட நண்பனைக் காப்பாற்ற முயன்றமாணவரொருவர் நீரில்மூழ்கிப் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார்.

இவரதுசடலம் மீனவர்களின் உதவியுடன் மீட்கப் பட்டுள்ளது.

காத்தான்குடி அலுகேயா வித்தியாலயத்தில் ஆண்டு11 இல்கல்விகற்ற ஜோகர்சிகான் என்ற மாணவனே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இதேவேளைகடலலையால் அடித்துச் செல்லப்பட்டு காப்பாற்றப்பட்ட 16வயதுடைய எம். ஜே' ஏ.மியான் என்ற மாணவன் சுயநினைவற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-4)

## செபஸ்ரியார் ஆலயத்தில் 5 வருடங்களின் பின் நேற்று திருப்பலிப் பூஜை

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமடம் செபஸ்ரியார் ஆலயத்தின் திருநாள் திருப்பலி பூஜை வழிபாடுகள் கடந்த 5வருட இடைவெளியின் பின் நேற்று பக்தி பூர்வமாக இடம் பெற்றன.

பல வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் ஆலய சுற்றாடல் அமைந்திருந்த காரணத்தினால் மேற்படி ஆலயம் பூஜை வழிபாடுகள் எதுவுமின்றி பூட்டிய நிலையில் காணப்பட்டது

தற்போது அப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் விலகி ஆலய வழிபாடுகளை இயற்றுவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பகுதி மக்களினதும் நாவாந்துறை பங்குத்தந்தை வணக்கத்திற்குரிய பீற்றர் துரைரட்ணம் மற்றும் கிறிஸ்தவப் பெருமக்களினதும் முயற்சியினால் அப்பகுதியில் இருந்த வெடிப் பொருட்கள் படையினரின் உதவியுடன் அகற்றப்பட்டு ஆலய வழிபாடுகளை வழமைபோல் செயற்படுத்துவதற்குரிய ஏதுநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (உ)

### ஆனையிறவு

களும் படையினரால் முறியடிக்கப் பட்டுவிட்டது.

விடுதலைப் புலிகள் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கே யுத்த நிறுத்த அறிவிப்பை அறிவித்துள்ளனர் ஆனால் அவர்கள் தொடர்ந்தும் ஷெல், மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆனையிறவை தகுந்த நேரத்தில் இராணுவம் கைப்பற்றியே தீரும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட தென்மராட்சிப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று இராணுவத்தளபதி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென்மராட்சிப் போர்முனையில் அமைதிச் சூழ்நிலை காணப்பட்டு வருகின்றபோதும் ஆனையிறவை கைப்பற்றும் முயற்சியின் ஒரு கட்டமாக மேலும் ஒருபாரிய நடவடிக்கைக்கான ஆயத்தங்களை இராணுவத்தினர் மேற்கொண்டுவருவதாகத் தெரிகப்படுகிறது

வலிகாமம் பகுதியில்நிலை கொண்டுள்ள இராணுவத்தினரில் பெரும்எண்ணிக்கையானோர் தென்மராட்சிப் போர்முனைக்கு நகர்த்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)


ஸ்ரீ செல்வா

(யாழ்ப்பாணம்)

விஜய், தேவயானி
சூர்யா
நடித்த

"ப்ரண்ஸ்"

10-15 (ப. நே)
2-15 (ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு
(கி 1910)


## சாகும்வரை உண்ணா விரதம்

(மட்டக்களப்பு)

கல்முனை, உபபிரிவுச் செயலகத்தை பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தக் கோரி இரு பெண்கள் நேற்று முதல் சாகும் வரைஉண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர் இக் கோரிக்கையை முன்வைத்து இடம் பெற்றுவரும்உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது. கல்முனை கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்உண்ணாவிரதப் போராட்டத்தில் சுமார்200பேர்கலந்துகொண்டனர். (ந-4)

## ஜனாதிபதி கவலை

(கொழும்பு)

குஜராத்மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமையேற்பட்டபாரியநில அதிர்வினால் உயிர்இழந்தவர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துள்ளார். பிரதமர் வாஜ்பாய்க்கு அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் பல்லாயிரக் கணக்கானஉயிர்களைக் காவு கொண்டஇந்தத்துயரச் சம்பவத்தை யிட்டு தாமும் தமது அரசாங்கமும் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். (ந-4)

## திருத்தம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தலைமைக் காரியாலய வளவினுள் அமைந்துள்ள பொது நூல் நிலையம் அடங்கலான பிரதான கட்டடத் தொகுதியின் கூரைப்பகுதியில் ஏற்பட்டிருந்த பழுதுகள் பிரதேச சபையினால் திருத்தியமைக்கப்பட்டுவருகின்றது. (உ-14)

## இலவச மூக்கு கண்ணாடி வழங்கல்

[வடமராட்சி கிழக்கு]

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க நிதியில் இருந்து அண்மையில், 200 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இதன் அடுத்த கட்ட இலவச கண்பரிசோதனை, வரும் மாசி மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் என வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள் தெரிவித்துள்ளார். [உ-43]

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம், என்னும் [illegible]
அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.